IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, HOSUR

OS NO.111/2014

Deposition DW2 witness for Plaintiffs / Defendant / Respondent Solemnly affirmed and sworn by Thiru. S. Chandru Grade III Bench Clerk on 22.09.2025 accordance with the provisions with the Act of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.சுப்பன்னாசெட்டி | Father's Name: | திரு.சொன்னப்பாசெட்டி |
| Village : | எடையநல்லூர் | Taluk : | ஒசூர் |
| பி.வா.சா. : | 2 | Age : | 60 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | | |

**முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கின் 3ம் தரப்பினர் ஆவேன். நான் இந்த வழககில் 1ம் பிரதிவாதி தரப்பு 2வது சாட்சியாக எனது முதல் விசாரணை சாட்சியத்தினை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விவரங்கள் நான் கூறி வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு என்னால் படித்துப்பார்க்கப்பட்டு கையொப்பம் இடப்பட்டுள்ளது.

**வாதிதரப்பில் குறுக்குவிசாரணை:–**

இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வரப்பெற்றதா என்றால் இல்லை. பிரதிவாதி அழைத்தானால்

வந்தேன். நான் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க 2,3 முறை சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்கக்கோரி எனக்கு நீதிமன்றத்தில் இருந்து ஏற்கனவே சம்மன் வந்ததது என்றாலும் ஆனால் நான் வரததால் அந்த மனு முடிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. எனக்கு எந்த சம்மனும் வரவில்லை. நான் எடையநல்லூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். வாதி மற்றும் 1ம் பிரதிவாதி நாகோண்டபள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறார்கள் எங்கள் கிராமத்திற்கும் வாதியின் கிராமதிற்கும் இடையில் 3 கீலோ மீட்டம் இருக்கும். நானும் வாதியும் 1 பிரதிவாதியும் எல்போர்ச் கம்பெனியில் 30 ஆண்டுகளாக ஒன்றாக வேலை செய்துள்ளோம் என்றால் சரிதான். அதனால் அவர்களுடைய குடும்ப விவரங்கள் அனைத்தும் நன்கு தெரியும் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் தாத்தா பெயர் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் தந்தை பெயர் திம்மராயப்பா. திம்மராயப்பா உடன் பிறந்தவர்கள் மொத்தம் 4 நபர்கள் எனறால் எனக்கு தெரியாது. திம்மாராயப்பா உடன்பிறந்தவர்கள் பெயர் லட்சுமய்யா, ராம்மய்யா, குள்ளப்பா என்றால் எனக்கு தெரியாது. மேற்சொன்ன 4 நபர்களும் ஒரே தெருவில் அடுத்தடுத்த வீட்டில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி அவருடைய வீட்டில் 1976ம் ஆண்டு இருந்து குடியிருந்து வருகிறார். 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு மேற்கு பக்கத்தில் போடுரப்பாவின் வீடு உள்ளது. திம்மராயப்பாவிற்கும் அவருடைய சகோதரர்களுக்கும் அவர்ளுடைய தந்தை 1958ம் வருடத்தில் பாகப்பத்திரம் எழுதிக்கொடுத்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 2 அங்குனம் அளவுள்ள வீடும் காலி இடமும் சேர்த்து மொத்தம் 6 அங்குனம் அளவுள்ள சொத்தை பிரித்து

கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு தெலுங்கு படிக்க தெரியாது. அவ்வாறு திம்மராயப்பாவின் தந்தை சொத்துக்களை பிரித்து கொடுத்த வகையில் கிழக்கு பக்கத்தில் லட்சுமய்யா அதற்கு அடுத்த மேற்கு பக்கத்தில் ராமய்யாவிற்கும், அதற்கு அடுத்த மேற்கு பக்கத்தில் திம்மராயப்பாவிற்கும் கடைசி மேற்கு பக்கத்தில் குள்ளப்பாவிற்கு பாகம் கொடுத்தார் எனில் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் உடன்பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் தந்தைக்கு 4 ஆண் பிள்ளைகள் 3 பெண் பிள்ளைகள் என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி கெம்பன்னாவிற்கு 2 ஆண் 1 பெண் குழந்தை அவர்கள் அனைவரும் நாகெண்டப்பள்ளியில் குடியிருந்து வருகிறார்கள். ஊரில் எந்த பகுதியில் குடியிருந்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி கெம்பண்ணாவும் அவருடைய மகன் திம்மராஜியும் நாகொண்டப்பள்ளி கிராமத்தில் ராஜ வீதிக்கு வடக்கில் உள்ள வீட்டில் ஒன்றாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் வீடு மாடி வீடு என்றால் சரியல்ல சீமை ஓடு வீடு. 1ம் பிரதிவாதியின் தம்பி மரியப்பாவை எனக்கு தெரியாது. திம்மராயப்பாவின் தந்தை திம்மராயப்பிற்கு கொடுத்த வீட்டை 1ம் பிரதிவாதியின் தம்பி மரியப்பாவின் பாகத்திற்கு கொடுப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. மரியப்பாவின் மகன் சீனிவாசன் என்றால் எனக்கு தெரியாது. மேற்சொன்ன மரியப்பா தன் மகன் பெயருக்கு எழுதிக்கொடுத்த பிழைத்திருத்தல் பத்திரத்தில் மேற்கு புற செக்குபந்தியாக வாதியின் தந்தை குள்ளப்பாவின் வீடு என குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. குள்ளப்பாவின் வீட்டிற்கு தெற்கு பக்கத்தில் உள்ள காலிமனையில் 1ம் வாதி ராமச்சந்திரனுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டது

என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சொத்தை பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றாலும் 1ம் பிரதிவாதி அழைத்தின் பெயரில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.

(ஒம். /–ஆர். நரசிம்மமூர்த்தி,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1
ஓசூர்.